# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 2nd Term Examination - 2021

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| **தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்**<br>**Communication & Media Studies** | **Three Hours**<br>**Gr -12 (2022)** | **29** | **T** | **I,II** |

**அறிவுறுத்தல் :-**

- ***பகுதி I எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***பகுதி I இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்.***
- ***பகுதி II நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.***
- ***பகுதி II ஒவ்வொரு வினாவிற்கும் 40 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.***

## பகுதி – I

❖ ***மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

*01.* இலங்கையில் முதன் முதலில் தொடர்பாடற் கற்கையினை அறிமுகம் செய்த பல்கலைக்கழகம்
1) யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
2) களனிப் பல்கலைக்கழகம்
3) சிக்காக்கோ இலினோயாஸ் பல்கலைக்கழகம்
4) தெஹிவளை கனிஸ்ட பல்கலைக்கழகம்
5) இராஜரட்ட பல்கலைக்கழகம்

*02.* தொடர்பாடுநரின் கருத்து, உணர்வு தகவலாக மாற்றும் செயன்முறை
1) புலக்காட்சி
2) குறிமுறையவிழ்ப்பு
3) குறிமுறையாக்கம்
4) கற்பனையாக்கம்
5) ஊடுகடத்துதல்

*03.* ஆட்களிடைத் தொடர்பாடலில் பயன்படுத்தக்கூடிய புதிய ஊடகமுறைகளுள் பொருத்தமற்றது
1) பல்லூடக செய்தி
2) மின்னஞ்சல்
3) ஒலிபெருக்கி
4) ஸ்கைப்
5) குறுஞ்செய்தி

*04.* தொடர்பாடல் செயன்முறையில் பேச்சுக்கலையை அடிப்படையாகக் கொண்டு பாரம்பரிய மாதிரியை முன்வைத்தவர்.
1) ஹரோல்.டி லாஸ்வெல்
2) ஷனோன் மற்றும் வீவர்
3) சார்ள்ஸ்கூலி
4) அரிஸ்ரோட்டில்
5) ஓஸ்குட் மற்றும் ஷ்ரம்

*05.* ஒரு நபரிற்குள் நடைபெறும் வாங்கி வகிபாகப் பரிமாற்றம் அழைக்கப்படுவது.
1) ஆளுள் தொடர்பாடல்
2) ஆளிடைத் தொடர்பாடல்
3) குழுத் தொடர்பாடல்
4) மெய்நிகர் தொடர்பாடல்
5) வெகுசத்ன தொடர்பாடல்

*06.* பேச்சுத் தொடர்பாடல் பெரும்பாலும்
1) வாய்மொழி தொடர்பாடலுடன் நெருங்கிய தொடர்பு.
2) அடிக்கடி நிகழ்வது மற்றும் செயற்கையானதல்ல.
3) புரிந்து கொள்வது கடினம்.
4) தொடர்பாடுநரை இனங்காண முடியா தன்மை.
5) கட்புல, செவிப்புல தொடர்பாடல் கூட்டம்.

07. தகவல் தொழினுட்ப வகுப்பறையில் மின்சாரம் தடைப்பட்டதால் வழுக்கி எறிவையை பயன்படுத்த முடியாமல் போனது. இதன்போது மாற்றீடாகப் பயன்படுத்தக் கூடிய ஊடக உபகரணம்

1) துரித எறிவை 2) ஊடாடுகை பலகை 3) வெண் பலகை
4) பல்லூடக எறிவை 5) மேந்தலை எறிவை

08. வானொலியில் இசை நிகழ்ச்சியை கேட்டு ரசித்த கமல் அதே நிகழ்ச்சியை தொலைக்காட்சியிலும் கண்டு மகிழ்ந்தார். இதன் மூலம் கமல் வானொலியில் உள்ள மட்டுப்பாடுகளை அறிய முடிந்தது. அவற்றுள் சரியானது.

1) மொழியின் தன்மை கற்பனவாதத்தை தழுவியிருத்தல்.
2) பேசுதலும் கேட்டலும் சமநேரத்தில் நிகழ்தல்.
3) ஒலியை மட்டும் அடிப்படையாகக் கொண்டது.
4) ஒருவழித் தொடர்பாடல் முறை.
5) எளிமையான மொழிநடை.

09. வெகுசன ஊடக நிறுவனம் யாதேனும் ஒரு காரணத்தின் பால் அதிக அதிகாரம் வழங்கப்படுதலுடன் தொடர்புடையது.

1) ஒழுங்காக்கி 2) வடிகட்டி 3) தணிக்கை முறை
4) ஊடக திரிபு 5) ஊடக விஸ்தீரணம்

10. வீட்டின் உள்ளக கலாசார செயலொழுங்கில் அதிகளவு தாக்கம் செலுத்தும் ஜனரஞ்சக பண்பாட்டியலை பரவலடைய செய்யக்கூடிய ஊடக வழிமுறை

1) தொலைக்காட்சி 2) திறன் கைத்தொலைபேசி 3) பத்திரிகை
4) வானொலி 5) இணையம்

11. உள்ளகத் தொடர்பாடற் செயலொழுங்கில் மிகச் சரியானது.

1) கனவு, கற்பனை, தீர்மானம் 2) தகவல், ஊடகம், பெறுநர்
3) உணர்வு, எண்ணம், செயற்பாடு 4) உணர்வு, எண்ணம், நடத்தை
5) நடத்தை, உணவு, கற்பனை

12. A – சைகைமொழி, உடல்மொழி பிரதானம்

B – ஐம்புலன்கள் ஊடான வெளிப்பாடுகள்

C – பேச்சு எழுத்து மொழிப்பாவனையின்றி தகவல் பரிமாற்றம்.

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய தொடர்பாடல் வடிவம்.

1) வாய்மொழி சார் தொடர்பாடல் 2) வாய்மொழியற்ற தொடர்பாடல்
3) கூட்டுத்தொடர்பாடல் 4) குறை சாரா தொடர்பாடல்
5) பேச்சு தொடர்பாடல்

13. பாரம்பரிய ஊடக வடிவங்களில் சாரம்மரத்தினால் ஆக்கப்பட்ட முகமூடிகளால் ஆற்றுகை செய்யப்படும் நாடக வகை எது?

1) தகட்ட சனிய 2) மகிடி கூத்து 3) சொக்கரி
4) வசந்தன் கூத்து 5) கோலம்

14. அரிஸ்டோட்டில் மாதிரியில் கேட்போர் எவ்வாறு செயற்பட்டு கொள்வர்?
   1) செயற்படு பெறுநர்கள்
   2) இலக்கு பெறுநர்கள்
   3) மந்தப் பெறுநர்கள்
   4) தொழிநுட்ப நோக்கில் ஈடுபாடுடையவர்கள்
   5) தொடர்பாடுநரை போன்று சம பங்கு வகிப்பர்

15. ஒருவருக்கு கிடைக்கின்ற செய்தியானது உடனே இன்னொருவருக்கு கிடைக்கும் செயற்பாட்டை வெளிப்படுத்தும் சங்கிலி?
   1) சக்கர மாதிரி
   2) புறணி பேசுதல் மாதிரி
   3) நிகழ்தகவு சங்கிலி
   4) வட்ட மாதிரி
   5) தனிச் சங்கிலி

16. சமூகக் கட்டமைப்பிலுள்ள மிகச் சிறிய அலகு
   1) பாடசாலை 2) வங்கி 3) சமய நிறுவனம் 4) குடும்பம் 5) வைத்தியசாலை

17. பாரம்பரிய நாடக வழிமுறைகளுள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேசத்திற்கு உரிய தனித்துவமான கூத்து வடிவங்கள் முறையே.
   1) வீரபத்திரர் ஆட்டம், வசந்தன்கூத்து
   2) வடமோடி, வடபாங்கு
   3) காத்தவராயன்கூத்து, மகிடிகூத்து
   4) கோலம், பறைமேளக்கூத்து
   5) காத்தவராயன் கூத்து, கோவலன் கூத்து

❖ **கீழே காட்டப்பட்டுள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 18, 19, 20 ஆகிய வினாக்களிற்கு விடை தருக.**

A – குறிமுறையாக்கம்
B – குறிமுறையவிழ்ப்பு
C – வழிமாற்றம் / பொருட்கோடல்
D – செய்தி
E – தடை
F – தொடர்பாடுநர்
G – ஊடகம்
H – தாக்கம்
I – சூழல்
J – பெறுநர்
K – பின்னூட்டம்

18. வில்பர் ஷ்ரம் தொடர்பாடல் மாதிரியின் செயற்பாட்டுடன் தொடர்புடைய அம்சங்கள்?
   1) A B C D 2) A B C E 3) A J D F 4) F D G J 5) F D J H

19. E எனும் அம்சம் செல்வாக்குடைய மாதிரி யாது?
   1) லாஸ்வெல் மாதிரி
   2) ஒஸ்குட் மாதிரி
   3) ஷனோன் - வீவர் மாதிரி
   4) பெர்லோ மாதிரி
   5) அரிஸ்ரோட்டில் மாதிரி

20. மேற்குறித்த மாதிரி உருவின் படி H தொடர்பான கருத்தியல்களை முன்வைத்தவர்கள்.
   1) அரிஸ்ரொட்டில், ஹாய்பர்ட்
   2) ஹாய்பர்ட், அன்குராய்ட்
   3) கேர்ட், லெவின், வைற்
   4) குளோட் ஷனோன், வீவர்
   5) அரிஸ்ரோட்டில், ஹரோல்.டி. லாஸ்வெல்

(20x2=40 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

*01.* **"மனிதன் உயிர்வாழத் தொடர்பாடல் இன்றியமையாதது"**

1) தொடர்பாடலின் அடிப்படைக்கூறுகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
2) தொடர்பாடல் எனும் பதத்தினை பொருள் விளங்கும் வண்ணம் விபரிக்குக. (8 புள்ளிகள்)
3) தொடர்பாடலை ஓர் துறைசார் பாடமாக கற்பதன் அவசியத்தினை விளக்குக. (12 புள்ளிகள்)
4) தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம் மற்றும் துறைசார் கற்கை நெறியின் வளர்ச்சி பற்றி ஆராய்க? (16 புள்ளிகள்)

*02.* **"தொடர்பாடல் கற்கை குருன்வெல்ட் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டு அறிமுகமாகியது"**

1) தொடர்பாடல் கற்கை அறிமுகத்துடன் தொடர்புடைய மேலைத்தேய கீழைத்தேய நிபுணர்கள் **நால்வரைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
2) தொடர்பாடல் பற்றி கருத்துரைத்த இரு வேறுபட்ட அறிஞர்களின் வரைவிலக் கணங்களினைக் குறிப்பிடுக. (8 புள்ளிகள்)
3) தொடர்பாடலின் இயல்புகள் **மூன்றினை** உதாரணங்களுடன் விளக்குக. (12 புள்ளிகள்)
4) தொடர்பாடலின் நோக்கங்கள் **நான்கினைத்** தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (16 புள்ளிகள்)

*03.* 1) ஆளுள் தொடர்பாடலின் பயன்கள் **நான்கினைப்** பட்டியற்படுத்துக. (4 புள்ளிகள்)
2) ஆளிடைத் தொடர்பாடல் பற்றி வரையறை செய்து அதன் இயல்புகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (8 புள்ளிகள்)
3) குழுத்தொடர்பாடல் செயலொழுங்கிற்கும் வெகுசனத் தொடர்பாடலுக்குமிடையிலான **நான்கு** வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக? (12 புள்ளிகள்)
4) வெகுசனத் தொடர்பாடலில் ஹப் (HUB) மாதிரி தொடர்பில் வரையறை செய்து அதன் **நான்கு** கூறுகளை ஆராய்க. (16 புள்ளிகள்)

*04.* 1) வாய்மொழித் தொடர்பாடலின் பணிகள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)
2) வாய்மொழி சாராத் தொடர்பாடலினை அறிமுகப்படுத்தி உடல் மொழித் தொடர்பாடல் பற்றி எடுத்துக்காட்டுக்களுடன் விபரிக்குக. (8 புள்ளிகள்)
3) முறைசார் தொடர்பாடல் எவ்வாறு முறைசாராத் தொடர்பில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை **மூன்று** அம்சங்களினூடாக ஆராய்க. (12 புள்ளிகள்)
4) தொடர்பாடல் மாதிரிகளில் அரிஸ்ரோட்டிலின் விளக்கம் எவ்வாறு ஹரோல். டி. லாஸ்வெல் மாதிரியில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை வரிப்படம் மூலம் விளக்குக. (16 புள்ளிகள்)

*05.* 1) குளோட்ஷனன் மற்றும் வொரள் லீவர் மாதிரியில் தலையாய அம்சத்தினை பெயர் குறிப்பிட்டு அதன் வகைப்பாடுகளினைத் தருக.
2) குறிமுறையவிழ்ப்பினை குறிமுறையாக்கமாக மாற்ற ஏதுவாகும் காரணியினைப் பெயரிட்டு அது தொடர்பில் விபரிக்குக. (2 புள்ளிகள்)
3) பாரம்பரிய ஊடகத்தின் இயல்புகள் **மூன்றினை** ஆராய்க. (4 புள்ளிகள்)
4) பாரம்பரிய ஊடகமுறைகள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

*06.* 1) நாட்டார் பாடல்களில் காணப்படும் விசேட அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2) சிறார்களுக்கு கல்வியறிவூட்டுவதில் நாட்டார் கதைகளினைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பிலான நான்கு விடயங்களினைக் குறிப்பிட்டு அவற்றில் **ஒன்று** பற்றி விபரிக்குக. (3 புள்ளிகள்)
3) வெகுசன ஊடகத்தின் விசேடமான பணிகள் **மூன்றினை** விளக்குக. (4 புள்ளிகள்)
4) வானொலி ஊடகத்தில் முன்வைக்கப்படும் படைப்பாக்க ரீதியிலான நிகழ்ச்சி வகைப்படுத்தல்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

*07.* 1) பத்திரிகை ஊடகம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட இரு வரைவிலக்கணங்களினைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)
2) தொலைக்காட்சி ஊடகத்தின் அடிப்படைப் பண்புகள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றுள் ஒன்ற பற்றிச் சுருக்கமாக விபரிக்குக. (3 புள்ளிகள்)
3) புதிய ஊடகங்களில் காணக்கிடைக்கும் பண்புகள் **மூன்றினை** விளக்குக. (4 புள்ளிகள்)
4) சமூக ஊடகங்கள் மானுட நலனுக்கு நன்மை பயக்கும் விடயங்கள், மற்றும் தீங்கிழைக்கும் விடயங்கள் தலா **இரண்டின்** அடிப்படையில் விமர்சன ரீதியாக தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)